23.01.2023

RM

# முதல் திருப்புதல் தேர்வு - 2023

12 - ஆம் வகுப்பு

## வணிகவியல்

காலம் : 3.00 மணி

மதுரை மாவட்டம்

மதிப்பெண்கள் : 90

பிரிவு - I

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் :-** 20 X 1 = 20

1. வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை .......... என்பர்.
அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்

2. மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது எது?
அ) புதுமைப்படுத்துதல் ஆ) கட்டுப்படுத்துதல் இ) திட்டமிடுதல் ஈ) முடிவெடுத்தல்

3. மூலதனச்சந்தை என்பது .......... க்கான ஒரு சந்தை ஆகும்.
அ) குறுகிய காலநிதி ஆ) நடுத்தர காலநிதி
இ) நீண்டகால நிதி ஈ) குறுகிய கால நிதி மற்றும் நடுத்தர கால நிதி

4. NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
அ) 1990 ஆ) 1992 இ) 1998 ஈ) 1997

5. அரசுப்பத்திரங்கள்............ போன்ற நிறுவனங்களால் வழங்கப்படுகின்றன.
அ) மத்திய அரசு ஆ) மாநில அரசுகள் இ) பகுதி அரசு அமைப்புகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

6. பங்குச்சந்தை ........... வியாபாரத்தை அனுமதிக்கிறது.
அ) நிறுவனங்களின் அனைத்து வகையிலான பங்குகள் ஆ) அரசாங்கம் வெளியிடும் பத்திரங்கள்
இ) பட்டியலிடப்பட்ட பத்திரங்கள் ஈ) பட்டியலிடப்படாத பத்திரங்கள்

7. காகித வடிவிலான பங்குகளை மின்னணு வடிவில் மாற்றுவதற்கான செயல்முறை......... ஆகும்.
அ) புறத்தோற்றமற்ற பத்திரங்கள் ஆ) பட்டியலில் இருந்து விலக்குதல்
இ) புறத்தோற்றம் உள்ள பத்திரங்கள் ஈ) தடையுள்ள பத்திரங்கள்

8. மனிதவளம் என்பது ஒரு .......... சொத்து.
அ) கண்ணுக்கு புலனாகும் ஆ) கண்ணுக்கு புலனாகா இ) நிலையான ஈ) நடப்பு

9. விளம்பரம் என்பது ஒரு ............. ஆட்சேர்ப்பு வளமாகும்.
அ) அகவளங்கள் ஆ) புறவளங்கள் இ) முகவர் ஈ) புறத்திறனீட்டல்

10. சரியான நபரை சரியான் வேலைக்கு வைப்பது என்பது?
அ) பயிற்சி ஆ) பணியமர்த்தல் இ) பதவி ஈ) உயர்வு மாற்றம்

11. பணிவழி பயிற்சி எங்கு அளிக்கப்படுகிறது?
அ) வகுப்பறையில் ஆ) தொழிற்சாலைக்கு வெளியில்
இ) வேலையில்லா நாட்களில் ஈ) விளையாட்டு மைதானத்தில்

12. உடனடி சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது.
அ) பொருட்கள் ஆ) பரிவர்த்தனை இ) ஒழுங்குமுறை ஈ) காலம்

13. தூய சில்லரை விற்பனையாளர் என அழைக்கப்படுபவர்.
அ) சந்தை உருவாக்குநர்கள் ஆ) நடவடிக்கை தரகர்கள் இ) வியாபாரிகள் ஈ) முகவர்கள்

14. முதலில் வேலை அடுத்து மனிதன் என்பது ஒரு கோட்பாடு
அ) சோதனை ஆ) நேர்காணல் இ) பயிற்சி ஈ) பணியமர்த்தல்

15. இயக்குநர் கூட்டம் ஆண்டுக்கு குறைந்தது ............... முறைகள் கூட்டப்படவேண்டும்.
அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

16. .......... பொருட்கள், சேவைகள், மூலதனம் மற்றும் உழைப்பு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக தேசிய பொருளாதாரங்களுக்கு இடையில் தடைகளை அகற்றுவதால் ஏற்படும் விளைவுகளாகும்.
அ) தனியார் மயமாக்கல் ஆ) தாராளமயமாக்கல் இ) உலகமயமாக்கல் ஈ) வெளிநாட்டு வர்த்தகம்

17. தேசிய நுகர்வோர் மறுவாழ்வுக் குழுவின் தலைவர் யார்?
அ) இந்திய உச்சநீதிமன்றத்தின் சேவை அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி
ஆ) பிரதம மந்திரி ஆ) இந்தியத்தலைவர்கள் ஈ) மேலே குறிப்பிடப்பட்டவை அல்ல

18. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| நுகர்வோர் சங்கங்களின் சர்வதேச அமைப்பு | - | i. 1960 |
| "இந்தியாவில் தயாரிப்பு திட்டம்" | - | ii. 2014 |
| ஸ்டாண்ட் அப் இந்தியா | - | iii. 2015 |
| மாற்றுமுறை ஆவணச்சட்டம் | - | iv. 1881 |
| சரக்கு விற்பனைச்சட்டம் | - | v. 1930 |
| புதிய பொருளாதாரக் கொள்கை | - | vi. 1991 |

அ) i, ii, iii, iv, v, vi ஆ) ii, i, iii, vi, v, iv இ) vi, v, iv, iii, ii, i ஈ) iv, i, ii, iii, v, vi



Scanned with CamScanner

19. கூற்று (A) : தெளிவான தொழில் முனைவோர் உளவியல் மற்றும் பொருளாதார காரணிகளால் உந்தப்பட்டு தொழில் துவங்க முனைந்தவர்கள்
காரணம் (R) : அவர்கள் தன்னுடைய அறிவு, பட்டறிவு, அனுபவம், திறமை, ஆற்றல் போன்றவற்றை உள்ளீடாக செலுத்தி தான் மேற்கொண்ட தொழில் வினையை வெற்றிகரமாக செயல்படவைத்து அதன் மூலம் இலாபம் பார்ப்பவர்கள்.
அ) (A) மற்றும் இரண்டும் சரி மேலும் (R) என்பது சரியான விளக்கம்
ஆ) (A) மற்றும் இரண்டும் சரி மேலும் (R) என்பது சரியான விளக்கம் அல்ல
இ) (A) தவறு ஆனால் (R) சரி ஈ) (A) சரி (R) தவறு

20. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும் :
அ) திறந்த நடைமுறை ஆ) குரல் வாக்கெடுப்பு
இ) கைகளை உயர்த்துவதன் மூலம் வாக்கெடுப்பு ஈ) வாக்கு சீட்டு முறை

## பிரிவு - II

**குறிப்பு : ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். வினா எண் 30க்கு கட்டாயம் பதிலளிக்கவும் :-** 7 X 2 = 14

21. மேலாண்மை என்றால் என்ன?
22. நுண்ணறிவு பரிசோதனை என்றால் என்ன?
23. விதிவிலக்கு மேலாண்மையின் பொருளை எடுத்துக்கூறுக.
24. சமூக சந்தையிடுகை என்றால் என்ன?
25. ஜான் F கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை?
26. அரசுப்பத்திரங்கள் சந்தை என்றால் என்ன?
27. "வாங்குவோர் ஜாக்கிரதை" என்றால் என்ன?
28. ஒழுங்குமுறை சந்தை என்றால் என்ன?
29. மனித வள மேலாண்மை என்றால் என்ன?
30. வலைதளங்களில் இருக்கும் வேலைவாய்ப்பு இணையதளங்களின் பெயர்கள் ஏதேனும் இரண்டினை குறிப்பிடுக.

## பிரிவு - III

**குறிப்பு : ஏதேனும் ஏழு கேள்விகளுக்கு பதிலளிக்கவும். வினா எண் 40க்கு கட்டாயமாக பதிலளிக்கவும் :-** 7 X 3 = 21

31. டேலரின் மேலாண்மைத் தத்துவங்கள் யாவை?
32. மூலதனச்சந்தையின் ஏதேனும் இரண்டு பணிகளை விளக்குக.
33. கருவூல இரசீதின் பொது இயல்புகள் யாவை?
34. காளை மற்றும் கரடி - விளக்குக.
35. சமூக சந்தையிடுதலின் நோக்கங்கள் யாவை?
36. சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?
37. புதிய பொருளாதார கொள்கை பற்றி ஒரு சிறிய குறிப்பை எழுதுக.
38. விற்பனை உடன்பாடு என்றால் என்ன?
39. "எழுந்திரு இந்தியா" என்றால் என்ன?
40. ஒரு பணியாளரின் மருத்துவ பரிசோதனை ஏன் அவசியமாகிறது?

## பிரிவு - IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் :-** 7 X 5 = 35

41. மேலாண்மையின் பல்வேறு பணிகளை விளக்குக. ***(அல்லது)***
முதல்நிலைச்சந்தை மற்றும் இரண்டாம் நிலைச்சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக.
42. பணிசார் தொழில் முனைவோரின் தன்மையை விவரி. ***(அல்லது)***
நுகர்வோரின் உரிமைகள் யாவை?
43. பங்குச்சந்தையின் பணிகளை விவரி. ***(அல்லது)***
செபியின் பணிகளை விவரி.
44. மனிதவள மேலாண்மையிலிருந்து மனிதவளத்தை வேறுபத்திக்காட்டுக. ***(அல்லது)***
ஆட்சேர்ப்பு முறைக்கும் தேர்ந்தெடுத்தலுக்குமுள்ள வேறுபாடுகளை தருக.
45. இயக்குநரின் தகுதிகள் பற்றிக் கூறுக. ***(அல்லது)***
நிறுமச்செயலரின் பணிகளை விளக்குக.
46. சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? விவரி. ***(அல்லது)***
நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் 1986ன் நோக்கங்கள் யாவை?
47. சரக்கு விற்பனைச்சட்டத்தின் சரக்கினை வகைப்படுத்திக் காட்டுக. ***(அல்லது)***
ரகு என்பவர் ஒரு நிறுவனத்தில் சலவை இயந்திரம் ஒன்றை இரண்டு வருட உத்தரவாதத்துடன் வாங்கினார். பயன்படுத்த தொடங்கிய இரண்டு மாதத்தில் சலவை இயந்திரம் பழுதாகிவிட்டது. உடனடியாக ரகு அந்த நிறுவனத்திடம் புகார் அளித்தார். ஆனால் நிறுவனம் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இச்சூழலில் ரகுவிற்கு நீங்கள் அளிக்கும் ஆலோசனைகளை தருக.



Scanned with CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

**+2 வணிகவியல் I Rev Mdu Dist. Jan -23**

**சரியான விடை**

1. (இ) வேலைப்பகிர்வு
2. (இ) திட்டமிடுதல்
3. (இ) நீண்டகால நிதி
4. (ஆ) 1992
5. (ஈ) மேற்கண்ட அனைத்தும்
6. (இ) பட்டியலிடப்பட்ட பத்திரங்கள்
7. (அ) புறதோற்றமற்ற பத்திரங்கள்
8. (ஆ) கண்ணுக்குப் புலனாகா
9. (ஆ) புறவளங்கள்
10. (ஆ) பணியமர்த்தல்
11. (ஆ) தொழிற்சாலைக்கு வெளியில்
12. (ஆ) பரிவர்த்தனை
13. (ஆ) நடவடிக்கை தரகர்கள்
14. (ஈ) பணியமர்த்தல்
15. (இ) 4
16. (இ) உலகமயமாக்கல்
17. (அ) இந்திய உச்சநீதிமன்ற சேவை அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி
18. (அ) i ii iii iv v vi
19. (அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான விளக்கம்
20. (ஈ) வாக்குசீட்டு முறை

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. மேலாண்மை:** மேலாண்மை என்பது முன் கணிப்பு செய்தல், திட்டமிடல், ஒழுங்கமைப்பது, கட்டளையிடுவது, ஒருங்கிணைப்பது, கட்டுப்படுத்துவது – **ஹென்றி.˙.போயல்**

**22. நுண்ணறிவு பரிசோதனை:** நுண்ணறிவு திறன் சோதனை என்பது ஒரு வகை உளவியியல் ரீதியிலான சோதனை ஆகும். இது மூளையின் சிந்திக்கும் ஆற்றல், மனத்திறன் நுண்ணறிவு போன்றவற்றை சோதிக்க பயன்படும்.

**23. விதிவிலக்கு மேலாண்மையின் பொருள்:** விதிவிலக்கு மேலாண்மை என்பது நெறிமுறையிலிருந்து விலகிப் போகும் நிகழ்வுகளை அடையாளம் காண்பதற்கும், கையாளவதற்கும் கவனம் செலுத்துகின்ற வணிக நிர்வாகத்தின் ஒரு பணியாகும்.

**24. சமூகச் சந்தையிடுகை:** சமூக நலனை உறுதிப்படுத்தும் வகையில் சமூகத்தில் குறிப்பிட்ட பழக்கவழக்கங்களையும், நோக்கங்களையும் வெளிப்படுத்தும் வகையில் பொருள்களை சந்தைப்படுத்தும் முறையை சமூக சந்தைப்படுத்தல் எனப்படும்.

**25. ஜான். F.கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள்:** பாதுகாப்பில் உரிமை, தகவல் பெறும் உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை, கேட்கும் உரிமை

**26. அரசுப் பத்திரங்கள் சந்தை:** அரசு அல்லது தங்கமுனை பத்திரங்கள் வாங்கவும் விற்கவும் கூடிய ஒரு சந்தைக்கு அரசுபத்திரங்கள் என்று பெயர்.

**27. வாங்குபவர் ஜாக்கிரதை:** வாங்கிய பொருள் பலனளிக்காவிடில் விற்றவர் பொறுப்பாக மாட்டார். வாங்கியவர் நிவாரணம் கோர முடியாது. எச்சரிக்கையாக இருக்க வேண்டும். என்ற தத்துவமே வாங்குபவர் ஜாக்கிரதை கோட்பாடாகும்.

**28. ஒழுங்குமுறை சந்தை:** அரசின் சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு செயல்படும் சந்தை அரசால் கட்டுப்படுத்தப்படும் சந்தை ஒழுங்குமுறை சந்தை ஆகும்.

**29. மனிதவள மேலாண்மை:** என்பது ஒரு நிறுவனத்தில் ஆட்களை பணியமர்த்தல், ஊக்குவித்தல், மற்றும் நிர்வகித்தல் தொடர்பான மேலாண்மை பணியைச் செய்வதாகும்.

**30.வேலைவாய்ப்பு இணையதளங்களின் பெயர்கள்:** Naukri.com, Linkedin, Indeed.com,Glassdoor…..

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. டேலரின் மேலாண்மைத் தத்துவங்கள் யாவை?**

அறிவியல் கட்டை விரலின் விதி அல்ல

இணக்கம். சச்சரவின்மை

தனிமனிதத் தத்துவம் அல்ல ஒத்துழைப்பு

ஒவ்வொருவருக்கும் அவரவரது திறமைக்கும் செழிப்புக்குமுள்ள வளர்ச்சி

**32. மூலதனச் சந்தையின் ஏதேனும் இரு பணிகள்:**

**சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம்:-** பொது மக்களிடமிருந்து சேமிப்பை திரட்டுகிறது. அதை மூலதனமாக மாற்றி தருகிறது.

**தொழில் துறை வளர்ச்சி:-** பொது மக்களிடம் திரட்டப்பட்ட சேமிப்பை முதலீடாக மாற்றி தொழில் துறையில் முதலீடு செய்கிறது. இதனால் தொழில் துறை வளர்ச்சி பெறுகிறது.

**33. கருவூல இரசீதின் பொது இயல்புகள்:** வெளியிடுபவர், நிதி இரசீது, நீர்மைத் தன்மை, முக்கிய ஆதாரம், பண மேலாண்மை

**34. காளை:-** பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை அல்லது தெஜிவாலா என்று அழைக்கப்படுகிறார். இவர் எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் மனப்பாங்கு கொண்டவர்.

**கரடி:-** எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர். கரடி அல்லது மண்டிவாலா என்று அழைக்கப்படுகிறார். இவர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.

**35.சமூக சந்தையிடுதலின் நோக்கங்கள்:** சமூக நலனை பாதுகாப்பதாகும். புகையிலை மது பொருட்களை பயன்படுத்துதல் சுற்றுப்புறம் மாசுபடுத்துதல் வரதட்சனை பெண் குழந்தை



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

பாதுகாப்பு சாலை பாதுகாப்பு மற்றும் நெகிழிப் பைகள் உபயோகம் போன்றவற்றிற்கு எதிர்க்கும் நோக்கத்திலும் சமூகம் விரும்பத்தக்க மற்றும் உடல் நலனை பாதுகாக்கும் பொருள்களை சந்தையிடுவதை சமூக சந்தைப்படுத்தல் குறிக்கும் சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் அல்லது பாதிக்கும் காரணிகளை நீக்கி தரமான வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் சந்தைப்படுத்துதலில் முக்கிய நோக்கம் ஆகும்

**36. சட்டமுறைக் கூட்டம்:** ஒரு பொது நிறுமம் தொழில் தொடங்கிய தேதியிலிருந்து ஒரு மாதத்திலிருந்து ஆறு மாதத்திற்குள் கூட்டப்படும் பங்குதாரர்களின் **முதல் கூட்டம்** ஆகும்.

**37. புதிய பொருளாதாரக் கொள்கை:** உலக வங்கி மற்றும் சர்வ தேச நாணய நிதியத்தின் நிலைமைகளுக்கு இந்தியா உட்பட்டு மற்றும் பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்கள் கொண்ட புதிய பொருளாதாரக் கொள்கையை அறிவித்தது. அவை. தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல், உலகமயமாக்கல். இவை LPG என அழைக்கப்படுகிறது

**38. விற்பனை உடன்பாடு:** உரிமையை எதிர்காலத்தில் மாற்றும் நடவடிக்கைகளுக்கு விற்பனை உடன்பாட்டு நடவடிக்கை எனப்படும்.

**39. எழுந்திரு இந்தியா (ஸ்டாட்டப் இந்தியா)** தொடக்க நிலையில் உள்ள தொழில்கட்கு ஆலோசனை வழங்குவது, வளர்ப்பது, ஆதரவு அளிப்பது, போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்வதாகும். இது 2016ம் ஆண்டு சனவரியில் துவங்கியது. நிதிகளின் நிதியின் மூலம் நிதி வசதி அளிக்கிறது.

**40.ஒரு பணியாளரின் மருத்துவ பரிசோதனை ஏன் அவசியம்:** சம்பந்தப்பட்ட வேலைக்கான உடல்தகுதி உடையவரா என அறிய
புதிதாக தேர்ந்தெடுக்கும் பணி நாடுநருக்கு இருக்கும் தொற்று நோய்களிலிருந்து வியாபார நிறுவனத்தில் ஏற்கனவே பணியாற்றும் பணியாளர்களின் உடல்நலனை பாதுகாக்க
பணியாளரை பணியமர்த்திய பின் ஏற்படும் அபரிதமான மருத்துவ சிகிச்சைக்கான செலவுகளை தடுக்க

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ. மேலாண்மையின் பல்வேறு முக்கியப் பணிகளைக் கூறி விளக்குக.**

**திட்டமிடல்:-** முன் கூட்டியே முடிவெடுத்தல்.
வருங்கால தேவைகளை பூர்த்தி செய்ய மதிப்பிடுதல்.

**ஒழுங்கமைத்தல்:-** உறுப்பினர்களிடையே இணக்கமாக உறவை ஏற்படுத்துதல்.
பணியாளர்களுக்கு சரியான பணிகளை வழங்குதல் மற்றும் பொறுப்பு ஏற்றல்.

**பணி அமர்த்துதல்:-** பணிக்கேற்ப பணியாளர்களை தேர்ந்தெடுத்தல்.
குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி அளித்தல்.
பணியாளர்களின் செயல்திறனை மதிப்பீட்டு ஊக்கம் அளித்தல். (பணப்பலன், பதவி உயர்வு)

**இயக்குவித்தல்**
இலக்குகளை அடைய தொடர்ச்சியாக வழிகாட்டுதல்
கூட்டம், கையேடுகளை, சுற்றறிக்கை போன்றவை மூலம் தகவல்களை அளித்தல்.

**ஒருங்கிணைத்தல்:-**
பல்வேறு திறமையுள்ள நபர்களை இணைத்தல்.
அனைத்து செயல்பாடுகளையும் இணைத்தல்.

| **41.ஆ. முதல்நிலைச் சந்தை** | **இரண்டாம் நிலைச் சந்தை** |
|---|---|
| புதிய பங்குகளுக்கான சந்தை | முன்னரே வெளியிட்ட பங்குகளுக்கான சந்தை |
| நேரடி | மறைமுகம் |
| ஒரு முறை | பல முறை |
| நிறுமம் | முதலீட்டாளர்கள் |
| நிலையான விலை | தேவை அளிப்பை பொறுத்து மாறும் |

**42.அ. பணிசார் தொழில் முனைவோரின் தன்மையை விவரி.**

**புதுமை படைக்கும் தொழில் முனைவோர்:-** புதுமை புகுத்திக் கொண்டே இருப்பவர். புதிய தொழில் நுட்பம் மூலம் உற்பத்தியை பெருக்குவது,

**மாதிரியை பின்பற்றும் தொழில்முனைவோர்:-** சந்தையில் கிடைக்கும் பொருட்களை வேறுமுறையில் வடிவமைப்பவர்கள்.

**காலம் கடத்தும் பழமைவாத தொழில் முனைவோர்:-** இவர்கள் புதுமை புகுத்துவதில் தயக்கம் காட்டுபவர்கள். தொழிலை மூட வேண்டிய சூழ்நிலை வந்தால் மட்டுமே மாற்றத்தை பின்பற்றுவார்கள்.

**மந்தமான தொழில் முனைவோர்:-** இவர்கள் தொழிலில் மாறுதல்களை ஏற்க விரும்பாதவர்கள்.

**42.ஆ. நுகர்வோரின் உரிமைகள் யாவை?**

**பாதுகாப்பு உரிமை:-** உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் பொருட்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமை உண்டு.

**தகவல் பெறும் உரிமை:-** நுகர்வோர் பொருட்களை வாங்கும் போது அப்பொருள் பற்றிய அனைத்து விதமான தகவல்களையும் விற்பனையாளிரிம் கேட்கும் உரிமை உண்டு.

**தேர்ந்தெடுக்கும் உரிமை :-** தனக்குத்தேவையான



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

பொருட்களை தேர்ந்தெடுத்துஎடுக்கும் உரிமை உண்டு.

**செவிமடுக்கும் உரிமை:-** நுகர்வோர் பொருட்களைப் பற்றிய தனது கருத்துக்களை கூறும்போது வணிக நிறுவனங்கள் செவிமடுக்க வேண்டும்.

**நிவாரணம் காணும் உரிமை:-** தவறான வணிக நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட நுகர்வோர் நிவாரணம் கேட்க உரிமை உண்டு.

**43.அ. பங்குச் சந்தை பணிகளை விவரி.**

**உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை:-** ஒரு முதலீட்டாளர் தனது ஏற்கனவே வெளியிட்ட பத்திரங்களை எளிதில் விரைவாக பங்கு சந்தைகளில் விற்கலாம்.

**பத்திரங்கள் மதிப்பீடு:-** பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யப்படும் விலை பதிவு செய்யப்பட்டுப் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

**முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு:-** பங்குச் சந்தையில் முதலீட்டாளர்களுக்கு நியாயமான அளவீடு மற்றும் நடவடிக்கைகளை வழங்குகிறது.

**மூலதனத்தை சரியாக வழிப்படுத்துதல்:-** மக்கள் நல்ல இலாபத்தை ஈட்டக் கூடிய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்தல்.

**மூலதன உருவாக்கம்:-** ஒரு நிலையான மூலதனத்தை தொழிற்துறையில் உறுதிப்படுத்துகிறது.

**43.ஆ. செபியின் பணிகளை விவரி**

போதுமான கல்வி மற்றும் வழிகாட்டல் மூலம் முதலீட்டாளர்களின் நலனை பாதுகாக்கிறது.
பங்குச் சந்தைகளில் வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்.
பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை தடை செய்கிறது.
நிதி இடைத்தரகர்களுக்கு பொருத்தமான பயிற்சி அளித்தல். மத்திய அரசால் வழங்கப்படும் செயல்பாடுகளை செயல்படுத்துதல்.

| 44.அ. மனித வளம் | மனித வள மேலாண்மை |
|---|---|
| மனிதன், அவனிடம் உள்ள அனைத்து வளங்களைக் கொண்டு வளர மற்றும் முன்னேற முடியும் . | வேலைவாய்ப்பில் மனித வளங்களின் மேம்பாடு மற்றும் பயன்பாடு ஆகியவற்றை திட்டமிடுதல் மற்றும் வழி நடத்துதல் ஆகியவற்றின் பயனுள்ள செயல்முறைகளை மேலாண்மை செய்வது. |

| 44.ஆ ஆட்சேர்ப்பு | தேர்ந்தெடுத்தல் |
|---|---|
| நேர்மறையான ஓர் செயல்முறை | எதிர்மறையான ஓர் அணுகுமுறை |
| முதல் படி | இரண்டாம் படி |
| சிக்கனமான முறை | செலவு மிகுதியான முறை |
| மிகவும் எளிதானது | மிகவும் சிரமம் சிக்கலானது |
| குறைவான காலம் போதுமானது | அதிக காலம் தேவைப்படும் |

**45.அ. இயக்குனர் தகுதிகள் பற்றி கூறுக?**

நிறுமத்திற்கு பொருத்தமான திறன், அனுபவம் மற்றும் அறிவு பெற்றிருக்க வேண்டும்.
சரியான மனநிலை உடையவராக இருக்க வேண்டும்.
நிறுமத்தின் தகுதி பங்குகள் வைத்திருக்க வேண்டும்.
ஒரு இயக்குனர் தனிநபராக இருத்தல் வேண்டும்.
நல்ல நிதிநிலை உடையவராக இருத்தல் வேண்டும்.
நீதிமன்றத்தால் குற்றவாளி என தண்டிக்கப்படாமல் இருத்தல் வேண்டும்.

**45.ஆ. நிறுமச் செயலரின் பணிகளை விளக்குக?**

**சட்டப் பூர்வமான பணிகள்:-** ஆவணங்களில் நிறுமத்தின் சார்பாக கையொப்பம் இடுவது.
பங்கு முதல் தொகையை அதிகரிப்பது குறித்த அறிவிப்பை நிறும பதிவாளரிடம் கொடுத்தல்.
ஆண்டு அறிக்கையில் கையொப்பம் இட்டு அனுப்புதல்.
சட்ட முறை ஏடுகளை தயாரித்தல்.
ஒவ்வொரு பங்குதாரர்களுக்கும் ஆண்டு பொதுக்கூட்டம் குறித்த அறிவிப்பை அனுப்புதல்.

**சட்டப் பூர்வமற்ற பிற பணிகள்:-** இயக்குநருக்கு ஆற்ற வேண்டிய முகமைப் பணிகள்.
பங்குநருக்கு ஆற்ற வேண்டிய முகமைப் பணிகள்.
ஊழியர்களுக்கு ஆற்ற வேண்டிய முகமைப் பணிகள்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

**46.அ. சந்தை எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது விவரி?**

**குடும்பச் சந்தை:-** குடும்பத்தின் உறுப்பினர்களிடையே பொருட்களை பரிமாற்றம் செய்வது.

**உள்ளூர் சந்தை:-** ஒரு குறிப்பிட்ட பொருளுக்காக வாங்குவோரும் விற்போரும் உள்ளூரிலேயே பங்கேற்பது,

**நீண்ட கால சந்தை:-** நீடித்து உழைக்க கூடிய பொருட்களை கையாளும் சந்தையாகும்.

**மிககுறுகியசந்தை:-** மிகக்குறுகியகாலத்தில் பயன்படுத்தக் கூடிய பொருட்கள் மட்டும் கையாளும் சந்தை.

**மொத்த விற்பனை சந்தை:-** உற்பத்தியாளரிடமிருந்து நேரடியாக பொருட்களை மொத்தமாக கொள்முதல் செய்வது.

**46.ஆ. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986ன் நோக்கங்கள் யாவை?**

நுகர்வோரின் உயிருக்கும் உடமைக்கும் ஊறுவிளைவிக்கும் பொருட்களை தடுத்தல்.

நுகர்வோர்களுக்கு பொருட்களின் உண்மையான தகவல்களை அளித்தல்.

நியாமற்ற வணிக நடைமுறைகளிலிருந்து நுகர்வோரை பாதுகாத்தல்.

நுகர்வோரின் உரிமைகள் கடமைகளை அறியச் செய்தல்.

நல்ல தரமான பொருட்களை சரியான விலைகளில் கிடைக்கச் செய்தல்.

**47.அ. சரக்கு விற்பனை சட்டத்தில் சரக்கினை வகைப்படுத்திக் காட்டுக.**

**இருக்கின்ற சரக்கு:-** ஒப்பந்தம் செய்யும் போது விற்பனையாளரின் கைவசம் உள்ள சரக்கு இருக்கின்ற சரக்கு. இவை மூன்று வகைப்படும்.

**ஓப்பிய சரக்கு:-** பல சரக்குகளில் இந்த சரக்கு தான் வாங்க தேர்வு செய்கிறேன் என அடையாளம் காட்டப்பட்ட சரக்கு.

**உறுதிசெய்யப்பட்ட சரக்கு:-** விற்பனைஒப்பந்தம் செய்யப்பட்ட பின்பு இதுதான் என்ற உணரப்பட்ட சரக்கு.

**உறுதியிடா சரக்கு:-** ஒப்பந்தம் செய்யும் முன்பு இவை தான் என இனம் காணப்படாத சரக்கு.

**எதிர்காலசரக்கு:-** ஒப்பந்தம் செய்யும்போது தன்வசம் இல்லாதஆனால் எதிர்காலத்தில் தரப்படும் சரக்கு.

**வருநிகழ்வுசார்சரக்கு:-**இந்த சரக்குவிற்பனை எதிர்காலத்தில் நடக்கஇருக்கும் நிகழ்ச்சியைப் பொறுத்தது.

**47.ஆ. ரகுவிற்கு நான் வழங்கும் ஆலோசனை**

**ரகு முதலில் நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் பதிவு செய்ய வேண்டும்.**

புகார் பின்வரும் வழிகளில் பதிவு செய்யப்பட வேண்டும்:

1. நடவடிக்கைக்கான காரணம் எழுந்த தேதியிலிருந்து, சேவை குறைபாட்டிலிருந்து முடிந்த தேதி வரை 2 ஆண்டுகளுக்குள் புகார் பதிவு செய்யப்படலாம்.
2அறிவிப்புக்கு முத்திரைத்தாள் தேவையில்லை
3. புகாரை நேரில், புகார்தாரரால் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலமாகவோ அல்லது திருத்தும் முகமைக்கு அஞ்சல் மூலமாகவோ பதிவு செய்யலாம்.
4. வழக்கறிஞர்கள் தேவையில்லை.

**புகாரில் பின்வரும் விவரங்கள் இருக்க வேண்டும்:**

1 புகார்தாரரின் பெயர் மற்றும் முழு முகவரி
2. எதிர் கட்சி / கட்சிகளின் பெயர் மற்றும் முழுமையான முகவரி
3. கிடைக்கும் பொருட்கள் அல்லது சேவைகளை வாங்கிய தேதி
4. மேற்கண்ட நோக்கத்திற்காக செலுத்தப்பட்ட தொகை
5. வாங்கப்பட்ட பொருட்களின் விவரங்கள் எண் அல்லது கிடைக்கும் சேவைகளின் விவரங்கள்
6புகாரின் விவரங்கள், நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் / குறைபாடுள்ள பொருட்களை வழங்குதல் / வழங்கப்பட்ட சேவையில் குறைபாடு / அதிக விலை வசூல் ஆகியவற்றுக்கு எதிராக உள்ளதா என்பதை, புகார் மனுவில் வெளிப்படையாகக் குறிப்பிட வேண்டும்.
7. பில்கள் / ரசீதுகள் மற்றும் தொடர்புடைய கடிதப் பிரதிகள் ஏதேனும் இருந்தால்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com